# நவவித பக்தி

**க.வித்யாலெட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
திருவையாறு

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

பக்தி என்பது அன்பின் வெளிப்பாடு ஆகும். குழந்தைகளிடம், பெற்றோரிடம், தோழர்களிடம், பெரியவர்களிடம், இறைவனிடம் எனப் பலவிதமாக வெளிப்படுகிறது. இவற்றில் இறைவனிடம் காட்டும் அன்பானது பக்திப் பாவமாகக் கருதப்படுகிறது. இந்தப் பாவமானது மனிதருக்கு மனிதர் வேறுபடும். ஒருவர் இறைவனைக் குழந்தையாகப் பாவித்து பக்தி செலுத்தலாம். ஒருவர் தோழனாக, ஒருவர் தாசனாக, ஒருவர் இறைப் புகழை, இறை நாமத்தைக் கேட்டுக்கொண்டே இருப்பர், ஒரு சிலர் இறைவனிடம் தன்னை முழுவதுமாக அர்ப்பணிப்பர், ஒருசிலர் இறைவன் புகழைப் பாடிக்கொண்டிருப்பர், ஒருசிலர் இறைவனை இகழ்வது போன்று புகழ்வர், ஒருவர் இறைவனிடம் உரிமைகொண்டு பக்தி கொள்வர். நாரதர் “பக்தோ பவதி, ராமோ பவதி, உன் மத்தோ பவதி” என்று உரைத்துப் பக்தியில் மனிதன் தன் உடலைப்பற்றிய உணர்வுகளை மறந்து, இறைவன் மேல்வைத்த அன்பில் லயித்து தன்வயப்படுவது என விளக்குகிறார். முக்கியமாக பக்தி என்ற நிலை, உடல் நினைப்புகளெல்லாம் போய், மனதில் அன்பு நிரம்பி இதயத்தில் ஆனந்தம் ததும்பி, தெய்வீகத்தை உணருவதுதான் என்றும் விளக்குகிறார்.

பக்தியின் மூலமாகத்தான் மனிதன் ஆன்மீகத்தில் உயர்நிலையை அடைகிறான். பக்தியினால்தான் மனிதனால் ஜனன, மரணம் என்கின்ற பிறவிக்கடலில் இருந்து கரையேற முடிகிறது. பக்தியினால்தான் பரமாத்மாவின் தத்துவத்தைப் புரிந்துக்கொள்ள மனிதனால் முயற்சிக்க முடிகிறது. பண்டைய காலத்திலிருந்தே பாரதநாட்டவர் பக்தியை முக்கியமானதாகக் கருதியது மட்டுமின்றி, வாழ்க்கையின் உயர்ந்த லட்சியமாகவும் கொண்டனர். இந்தப் பக்தியானது பலவிதமாகக் காணப்பட்டாலும், ஆன்றோர்களால் ஒன்பதுவிதமாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அவை: நவவித பக்தி ச்ரவணம், ஸ்மரணம், கீர்த்தனம், அர்ச்சனம், வந்தனம், பாதசேவனம், தாஸ்யம், சக்யம், ஆத்மநிவேதனம்.

### ‘நவ’ என்ற சொல்லின் மகத்துவம்

பக்தி என்ற பதத்திற்குப் பலவகையான விளக்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொருடைய இதயத்திலேயும் நிலையாகக் குடிகொண்டு இருந்த இந்த பக்திரசமானது ஒளிவிட்டுப் பிரகாசித்துக்கொண்டு இருக்கிறது. பாரத நாட்டில் ஆதி காலந்தொட்டே ஏழு என்ற எண்ணிற்குப் பிறகு ஒன்பது என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் தந்து போற்றியுள்ளார்கள்.

### நவவித பக்தி

பக்தி என்பது மனவுணர்வினை பரமாத்மா எனும் பேரின்பத்தில் ஆழ்த்துவது. அவ்வகையில் ஜீவாத்மா செலுத்தும் பக்தியானது பலவகையில் வெளிப்படுத்தப்படுகிறது. இருப்பினும் இப்பக்திமார்க்கத்தில் ஒன்பது வகையான பக்தி நவவித பக்தியாக அமைக்கப்பட்டுள்ளது. **“ஸ்ரவண கீர்த்தனம் விஷ்ணோ ஸ்மரண பாதசேவனம் அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்**

**சக்யம் ஆத்ம நிவேதனம்".**

1. சிரவணம் - இறை நாமத்தை, இறைப்புகழை கேட்டுக்கொண்டே இருப்பது - பரிஷித் மகாராஜா
2. கீர்த்தனம் - இறைவனின் புகழைப் பாடுவது - மீராபாய்.
3. ஸ்மரணம் - எப்போதும் நினைந்து அவன் நாமாவைச் சொல்லிக்கொண்டே இருப்பது - ஸ்ரீதியாகராஜர்.
4. அர்ச்சனம் - இறைவனை அர்ச்சிப்பது - கண்ணப்ப நாயனார்.
5. வந்தனம் - இறைவனைப் பூஜிப்பது – அக்ரூரர்.
6. பாதசேவனம் - இறைவனின் பாதத்தினைப் போற்றுவது – பரதர்.
7. சக்யம் - இறைவனைத் தோழனாக நினைத்துப் போற்றுவது – சுந்தரர்
8. தாஸ்யம் - இறைவனுக்குத் தொண்டனாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு துதிப்பது – அப்பர்
9. ஆத்ம நிவேதனம் - தன்னை முழுவதுமாக இறைவனிடம் அர்ப்பணிப்பது – விபீஷணன் இந்த நவவித பக்திக்கென்றே ஸ்ரீ ஸ்வாதி திருநாள் மகாராஜாவால் இயற்றப்பட்ட நவவித பக்திக்கீர்த்தனைகள் உள்ளன. நவவித பக்தியினைப் பின்பற்றி முக்தி பெற்றவர்கள் பலர்.

**1.ஸ்ரவணம்**

இறைவன் புகழைக் கேட்பதையோ, அவன் திருப்பாடல்களைக் கேட்பதையோ, அனுபவிக்கத் தொடங்குவது பக்தியின் முதல் நிலையாகும். இது ஸ்ரவணம் எனப்படுகிறது.

**"ராமா ராமா ராமா என்று நாமம் சொல்லிப் பாடுவோம்**
**நாமம் சொல்ல வராவிட்டால் நல்லவரோடு சேருவோம்**
**கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா என்று நாமம் சொல்லிப் பாடுவோம்**
**நாமம் சொல்ல வராவிட்டால் நல்லவரோடு சேருவோம்"**

மகாபாரதத்தில் தருமருக்குப் பின் அஸ்தினாபுரத்தை ஆண்ட மன்னனாவான் பரீட்சித்து. அவன் மத்ய நாட்டு இளவரசி உத்தரைக்கும் அபிமன்யுவிற்கும் பிறந்தவன். தந்தைக்குப்பின் பரத இராஜ்ஜியத்தின் அரியாசனத்திலிருந்து பரீட்சித்துத் தனது நாட்டை நீதிநெறியுடனும், அன்புடனும், ஆட்சி புரிந்து குடிமக்களை நன்முறையில் பாதுக்காத்து வந்தான். நீண்டகாலம் தொடர்ச்சியாகப் பல தேசங்களை வென்ற பின்னர், கடைசியில் கங்கைக்கரையோரம் முகாமிட்டு, வெற்றியின் சின்னமாக மூன்று அசுவமேத வேள்விகளை சாஸ்திர முறைப்படி நடத்தினான். ஒருமுறை மகரிஷி வியாசரிடம் கிருஷ்ணரின் சிறப்புக்களையும், மகிமைகளையும் எடுத்துக் கூறுங்கள் எனக்கூறி, வியாசர்மூலம் கிருஷ்ண பகவானின் லீலைகளைக் காதால் கேட்டு இன்புற்றான்.

பரீட்சித்து ஒரு சமயம் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது தீராததாகத்தினால் அவதிப்பட்டான். தண்ணீர் தேடி அலைந்தான். முனிவர் இல்லம் தென்பட்டது. சமீகர் என்ற முனிவரின் குடிசையினுள் நுழைந்தான். பலமுறை வணங்கியும் தியானத்திலிருந்த அவரது கவனத்தைத் தன்மீது திருப்ப இயலவில்லை. இதனால் கோபமுற்ற மன்னர் பரீட்சித்து, செத்தபாம்பை சமீக முனிவரின் கழுத்தில் போட்டுவிட்டுச் சென்றான். சற்று நேரம் கழித்து வந்த முனிவரின் மகன் தனது தந்தையின் கழுத்தில் இருந்த பாம்பைப்பார்த்து இந்த இழிவான காரியத்தைச் செய்தவர் ஏழுநாளில் பாம்பு கடிப்பட்டு இறப்பான் எனச் சாபம் இடுகிறான்.

முனி குமாரனின் சாபத்தை அறிந்த மன்னர் பரீட்சித்து தனது மகன் ஜனமேஜயனை அத்தினாபுரத்தின் அரியணையில் அமர்த்திவிட்டு, நாட்டைத் துறந்து தன்வாழ்வின் கடைசி ஏழு நாட்களில் சுகமுனிவரிடம் பாகவத் கதையைக் கேட்டறிகிறான். சாபத்தின்படியே பாமபரசன் தட்சகன் பரீட்சித்தை ஏழாம்நாளில் கடிக்கப் பரீட்சித்து மேலுலகம் செல்கிறான். இவ்விதமாக தன் இறுதி நாட்கள்வரை இறைநாமத்தை காதாலேயே கேட்டு முக்தியடைந்தவர் பரீட்சித்து மஹாராஜா.

**2. கீர்த்தனம்**

எல்லாத் தர்மங்களையும்விட இறைவனின் பெயரைக் கீர்த்தனம் செய்வதே சிறந்தது என்கிறது ரிக்வேத வாக்கியம்.

**"த்யாயன் கிருதே யஜன் யஜ்ஜை**
**திஆராதாயாம் திவாபரேர்ச்சயன்**
**யதா ப்னோதி ததாப்னோதி**
**கலௌ ஸங்கீர்த்ய கேஸவம்" (விஷ்ணு புராணம் 6:2:17)**

க்ருதயுகத்தில் தியானம் செய்தாலும், திரேதாயுகத்தில் யாகம் செய்தாலும், த்வாபரயுகத்தில் பூஜை செய்தாலும் கிடைக்ககூடியதாகக் கூறப்படும் பலன் கலியுகத்தில் இறை சங்கீர்த்தனத்தால் கிடைக்கும் என்பது மேற்கண்ட ஸ்லோக்கத்தின் கருத்து.

**"ப்ரதத்தே அத்ய சிபிவிஷ்ட"**

இதனையே ஸ்ரீ புரந்தரதாஸா் கீழ்கண்ட பாடல் மூலமாக கூறுகிறாா்.

**"நின்யாஹோ நின்ன ஹங்க்யாகோ"**
**நின்ன நாமத பல வொந்தித்தரே ஸாகோ" (ஸ்ரீமத் பஜனாம்ருதம் பக்: 134)**

இதன் பொருள் உன்னுடைய பரநாமங்களில் ஒன்றின் பலனே எனக்கு போதுமானது. மேற்கண்ட வாக்கியங்கள் இறைவனைக் காட்டிலும் இறைவனின் பெயருக்கு மகத்துவம் அதிகம் என்பதை நிரூபிக்கின்றன. இவ்வாறு இறைவனின் புகழை இடைவிடாது ஜபிப்பது நாமகீர்த்தனம் எனப்பட்டது. இதனையே பலா் கூடி இசையுடன் பாடப்பட்டபோது நாம ஸங்கீர்த்தனமானது. இறைவன் ஓசை வடிவினன், இசைப்பிரியன் என்றேல்லாம் வருணிக்கப்படுகிறான். அத்தகைய இறைவனை இசையோடு வழிப்படுவது சாலச்சிறந்தது என்பதனை உயர்ந்தே உருவாக்கப்பட்டது நாம சங்கீர்த்தனம்.

**"நாஹம் வஸாமிவைகுண்டே**
**நயோகி ஹ்ருதையை ரவௌ**
**மத் பக்தா யத்ர கா யந்தி**
**த்தரதிஷ்டாமி நாரத" (பத்மபுராணம் 7:95:23)**

பத்மபுராணத்தில் பகவானின் கூற்று. பகவான் வைகுண்டத்திலோ, யோகிகளின் ஹ்ருதயத்திலோ இல்லை. பக்தன் தன்னை எங்கு பாடிக்கொண்டிருக்கிறானோ அங்கேயே தான் இருப்பதாக இறைவன் நாரதரிடம் கூறுகின்றாா். இசை பாடும்நிலையில் இறைவனைத்தொழுது இறைவனடி சேர்ந்தவா்களில் மீராபாய், தமிழிசைமூவா், கா்நாடகஇசைமூவா், புரந்தரதாஸா், ஜெயதேவா், அருணகிரிநாதா், சதாசிவ பிரம்மேந்திரா் போன்ற பலா்.

தென்னிந்தியாவில் ஆண்டாள் போல, வட இந்தியாவில் மீரா. இவா் கிருஷ்ணா்மீது மிகுந்த பற்றுக்கொண்டவா். கி.பி. 1498 – கி.பி 1547 வடஇந்திய வைணவ பக்தி உலகில் மறுக்கமுடியாத கிருஷ்ண பக்தை ஆவாா். இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரிலிருந்து 70 கிலோ மீட்டா் தொலைவில் உள்ள மேட்தா என்னும் இடத்தில் பூநாயகன் - சந்திரமுகி தம்பதிக்கு ஐப்பசி பௌா்ணமியில் மகளாகப் பிறந்தவா் மீராபாய். சிறுவயது முதலே கண்ணன் மீது அன்பு மேலிட்டு பல பாடல்களைப்பாடி பக்தி மேற்கொண்டவள் மீராபாய். உரிய வயதினில் திருமணம் நடந்த மீராபாய் கணவனுக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்தாள். குடும்பத்தினரிடமும் இதமாக இருந்தாள். மற்ற நேரங்களில் கண்ணன் வழிபாட்டிலும், பாடலிலும், ஆடலிலும் தோழிகளுடன் ஈடுபட்டாள். வாழ்க்கையில் பலசோதனைகளை எதிர்கொண்டாலும் மீராபாய் கண்ணனைப் பாடுவதை மட்டும் நிறுத்தவில்லை. சங்கீர்த்தனத்தால் கண்ணனை நினைந்து பக்தியில் திளைத்திருந்தாள். கணவா் போஜராஜன் இறந்தபின் மீராபாய் கிருஷ்ண விக்ரகத்துடன் சாதுக்களுடன் ஆடிப்பாடி, சாதுக்கள் கொண்டுவரும் பிரசாதத்தை உண்டு வாழ்ந்து, நிறைவில் கண்ணன் அரசு புரிந்து மறைந்த துவாரகை வந்து, கண்ணன் வாழ்ந்திருந்த பகுதிகளைக் கண்டு ஆடிப்பாடி அங்கேயே கண்ணனுடன் ஐக்கியமானாள். மீராபாய் 1300 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளாா். இவா் இயற்றிய பக்திப் பாக்கள் இன்றும் பக்தா்களின் உள்ளங்களை உருகச் செய்கின்றன.

### 3. ஸ்மரணம்

சதா சர்வகாலமும் இறைவனை நினைக்க ஆரம்பிக்கும் நிலை "ஸ்மரணம்" எனப்படுகிறது. அவனது மனம் மற்றும் வாக்கு யாவும் இறை நாமாவை ஸ்மரணிக்கிறது.

**"ஸ்ரீராமமுல திவ்ய ராம ஸ்மரணஜேயுசுன்ன சாலு**
**கோரமைன தபமுலகு கோரதேடிகே மனஸே." (ஸ்ரீமத் பஜனா பக் 12)**

மேன்மையான நாம ஸ்மரணம் பக்தியுடன் இருத்தல்வேண்டும். இதற்கேற்றார்போல் பெரியாழ்வார் தன்மனதில் இறைவன் குடி கொண்டுள்ளதை அழகிய பாசுரத்தினால் பாடுகிறார்.

**பனிக்கடலில் பள்ளிக்கோனைப் பழகவிட்டு ஓடி வந்தென்**
**மனக்கடலில் வாழவல்ல மாயமணாளநம்பீ! (பெரியாழ்வார் திருமொழி 5:4:9)**

பக்தியுடன் இறைவனின் நாமத்தைப் பாடுவதால் மலைபோல் வந்த துன்பம் பனிபோல் மறைகிறது.

சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் திருவாரூரில் இராமபிரம்மம்-சீதம்மாளுக்கு மகனாக 4-5-1767ல் பிறந்தார். இவரின் சிறுபிராயத்திலேயே இவரது குடும்பம் திருவையாறுக்குக் குடிபெயர்ந்தது. இவருக்கு ஸ்ரீஇராமர்மீது ஈடுபாடு அதிகம். 96 கோடி இராம நாமத்தை ஜபித்து ஸ்ரீஇராமபிரானை சீதை, இலட்சுமணன், அனுமான் சகிதமாக நேரில் கண்டவர். அன்று முதல் ஸ்ரீஇராமர்மீது பல இசை உருப்படிகளை இயற்றிப் பாடியுள்ளார். எந்நேரமும் ஸ்ரீஇராமநாம ஜபத்துடனேயே வாழ்ந்தவர். இராம நாம ஜப மகிமையினால் இன்றும் இப்புவி போற்றும் இசை வாக்கேயக்காரராக உலகெங்கும் போற்றப்படுபவர்.

இராகம் : அடாணா தாளம் : ஆதி

பல்லவி

**ராம நாமம் பஜரே மாநஸ**
**சரணம்**
**ராகரஹித ஜநபாககேயுநிவி**
**நாகதி எவ்வரே த்யாகராஜநுத (ராம)**

### 4. பாதசேவனம்

இறைவனை சதா ஸ்மரணிக்கின்ற நிலைப்பெற்ற பக்தனானவன் இறைக் கைங்கர்யத்தில் ஈடுபடுகிறான். இறைவனின் பாதத்திற்குச் சேவை செய்கிறான். இந்நிலை பாதசேவனம் ஆகும். பாதசேவனத்திற்கு சிறந்த உதாரணமாகப் பரதரைக் குறிப்பிடலாம். பகவானின் கால்களைப் பற்றிக்கொண்டு விழுந்துக்கிடப்பது. இப்படிப்பட்ட பக்தியை செய்து காட்டியவன் பரதன். பதினான்கு வருடங்கள் இராமனின் பாதுகைகளை அரசுபீடத்தில் வைத்து வழிப்பட்டு வந்து நல்லாட்சி தந்தவர் பரதன்.

### 5. அர்ச்சனம்

இறைவழிப்பாட்டில் ஈடுபட ஆரம்பிக்கும் பக்தன் இறைவனைப் பூஜிக்க ஆரம்பிக்கிறான். இந்நிலை அர்ச்சனம் ஆகும். இறைவனுக்கு அபிஷேகம், செய்து ஆடை அணிவித்து, மலர்களால் அலங்காரம் செய்து நைய்வேத்தியம் செய்து, தீப, தூப காட்டுதல் மயில் தோகையால் விசிறுதல் அர்ச்சனம் ஆகும். இந்நிலையில் நின்று முக்தி பெற்றவர் கண்ணப்பநாயனார் ஆவார். பொத்தப்பி நாடு வேடர்குலத் தலைவனான நாகனுக்கும், அவன் மனைவி தத்தைக்கும் முருகன் அருளால் பிறந்தவர் திண்ணன். நாகன் வயது முதிர்ந்த காரணத்தினால் தன் மகனைத் தலைவனாகப் பெயர் சூட்டினான். ஒரு நாள் திண்ணன் தன் தோழர்களான நாணன், காடன் இருவருடன் வேட்டைக்குச் சென்றான். சென்ற இடத்தில் திருக்காளத்தியில் இருந்த காளத்திநாதரைக் அன்பு மேலிட, ஓடிப்போய் காலத்திநாதரை கட்டித்தழுவினார். கண்கள் விரிந்து, மலர்ந்து, ஆனந்தக்கண்ணீர் அருவியாகப் பாய்ந்தது. அங்கே ஏற்கனவே இறைவனுக்கு நீர் ஊற்றி அபிஷேகம் செய்து மலர்களால் அலங்கரித்தது போல் இருந்தது. இது இறைவனுக்குப் பிடிக்கும் போலும் என்று தானும் அவ்வாறே தன்வாயில் நீர்க் கொண்டுவந்து அபிஷேகமும், இலைகளைப் பறித்து அர்ச்சனையும், இறைச்சியை படைத்தும் இறைவனைத் தினமும் தொழுதார்.

தினமும் காளத்திநாதருக்கு பூஜை செய்யும் சிவகோசரியார் காலை வந்து இதனைக்கண்டு வருந்தி இடத்தைத் தூய்மைப்படுத்தி தன் நித்திய பூஜையினைச்செய்து செல்வார். சிவாகோசரியார் தூய்மைப்படுத்தி பூஜை செய்வதும் பிறகு திண்ணனார் வந்து வேடுவரின் முறைப்படி இறைச்சியை வைத்துப் படைப்பதுமாக இருந்தது. இதனால் சிவகோசரியார் என்ன நடக்கிறது என காண்பதற்காக மறைந்திருக்க, திண்ணனின் அன்பினை வெளிக்காட்டுவதற்கு இறைவன் உளம் கொண்டு, தன் வலக்கண்ணிலிருந்து உதிரம் வெளிப்படச் செய்தார். திண்ணனார் பதைபதைத்து தரையில் விழுந்தார். பல உபாயங்கள் செய்தும் இரத்தம் நிற்காமல் போகவே "ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்க்கும்" என்ற பழமொழிக்கேற்ப தன் வலக்கண்ணைப் பறித்து சிவபெருமானின் வலதுகண் பகுதியில் பதித்தார். காளத்திநாதர் தனது இடது கண்ணிலிருந்து இரத்தம் வழியச்செய்தார். இறைவனின் புண்பட்ட கண் எதுவென அடையாளம் கண்டுபிடித்துத் தம் கண்ணை அதில் பதிப்பதற்காக இறைவனின் இரத்தம் ஒழுகும் கண்ணின்மீது தமது காலை ஊன்றிக்கொண்டார். திண்ணனார் சிறிதும் வருந்தாமல் தன்னுடைய மறுகண்ணையும் தோண்ட முற்பட்டபொழுது காளத்திநாதர் திண்ணனாரைத் தடுத்தாட்கொண்டு கண்ணப்பநாயனாராக அருளினார். மனமுவந்து இறைவனுக்குத் தம்மால் முடிந்தவற்றைக்கொண்டு அர்ச்சிக்க 63 நாயன்மார்களில் ஒருவராக போற்றப்பட்டவர் கண்ணப்ப நாயனார்.

### 6. வந்தனம்

அர்ச்சிக்க ஆரம்பிக்கும் பக்தன் இறை வந்தனங்களை அனுஷ்டிப்பது வந்தனமாகும். இதற்கு சான்று அக்ரூரர். கோகுலத்தில் உள்ள கோபிகைகளின் தலைவன் கண்ணன். கொடிய அரக்கனான கம்சனை அழிக்கவேண்டி திருமால் எடுத்த அவதாரம் கண்ணன். கம்சன் இக்கண்ணனை அழிக்க மனம்கொண்டு, அக்ரூரரைக் கொண்டு கண்ணனைத் தனுர்யாகத்திற்கு அழைத்தான். லஷ்மி தேவியின் கணவரும், தேவகியின் புதல்வருமான ஸ்ரீகிருஷ்ண பகவானிடம் ஒருபொழுதும் மாறாத பேரன்பு கொண்டவரும், இவ்வுலகத்தின் நலனுக்காக, உலகத்தினர் அனைவரிடமும், சிறிதும் கொடுமையுடன் நடக்காதவரும், மிகப்பொருத்தமான பெயருடைய அக்ரூரரும் மதுரையிலிருந்து புறப்பட்டு மாலைப் பொழுதில் கோகுலத்தை அடைந்தார். அங்கு இந்திரன் முதலிய திக்பாலர்களுடைய கிரீடங்களுடன் சேர்ந்தும், தூய்மை வாய்ந்ததுமான திருவடிப் பொடிகளையுடையதும், பூதேவிக்கு மகிழ்ச்சியை அளிப்பவைகளும், தாமரை மலர்மாலை, அங்குசம், முதலிய கோடுகளுடன் கூடியதுமான, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினுடைய திருவடிச்சுவடிகளைக் கண்ணுற்றார். கண்டவுடனேயே, எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து உணர்ச்சி வசப்பட்டார். மயிர் கூச்சலால் உடல் சிலிர்த்தது. கண்களில் ஆனந்தக்கண்ணீர் வழிந்தது. "இவைகள் என் தெய்வத்தின் திருவடிகள் பட்டப்பொடிகள் அல்லவா" என்று எண்ணி தேரிலிருந்து துள்ளிக்குதித்தார். கண்ணனுடைய திருவடிப்பட்ட மண் பொடிகள் மீது மீண்டும்,மீண்டும் புரண்டார். அக்ரூரர் துளசிகள் அடர்ந்து வளர்ந்து காணப்படும் பூஞ்சோலையில், அடையர்களின் கூட்டத்தில், பசுக்கள் நடுவில், ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்துவிட்டு, அவரை நமஸ்காரம் செய்து, பிறகு பக்தியுடன் அவரிடம் வேண்டுகிறார்.

**அக்ரூரர் பிரார்த்தனை**

**"ஸ்ரீ நந்தகோ பதனயாகிலவிச்வமூர்த்தே**
**ஸ்ரீமத்மயோதி தனயாதவ க்ருஷ்ண மூர்த்தே**
**ஆனந்தயாகிலமசேஷ் ஜகந்நிதான**
**மீனாங்க கோடிஸமஸுந்தர சுத்த கீர்த்தே"**

புண்ணியம் செய்த நந்தகோபருடைய மைந்தரே, உலகம் முழுவதையும் தன் உடலாகக் கொண்டவரே, பாக்கியசாலியான பாற்கடலின் மகளான லட்சுமி தேவியின் மணாளரே, பரம்பொருளின் வடிவமாக இருப்பவரே, உலகங்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக இருப்பவரே, கோடி மன்மதர்களுக்கு இணையான அழகு பொருந்தியவரே, நல்ல புகழ்வுடையவரே, உலகம் முழுவதும் இன்புற்றிருக்க அருள்புரிவீராக. பக்தரான அக்ரூரர் மோக்ஷத்தையளிக்கும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினுடைய திருவடித் தாமரைகளில் மீண்டும் மீண்டும் வணங்கி, தானே பிரகாசிக்கின்றவரும், தன் தலைவனுமான, ஸ்ரீகிருஷ்ணனுடைய கல்யாண குணங்களை மனதில் தியானம்செய்து,

அவருடைய சமீபத்தில் சென்று, மிக்க சந்தோஷத்துடனும், திதித்த குரலுடனும், மிகப்பெரியவர்களுக்கெல்லாம் மிகப்பெரியவரே, என் தலைவரே, எனக்கு நல்லறிவைப்புகட்டுங்கள் என்று அவரை வணங்கித்துதித்தார்.

**7. தாஸ்யம்**

பக்தன் இறைவனுக்கு தொண்டுபுரிய ஆரம்பிக்கும் நிலை தாஸ்ய பாவமாகும். திருநாவுக்கரசர் இறைவனுக்கு தாஸனாக தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டவர். அவர் திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் புகழனார், மாதினியார் என்பார்க்கு புதல்வராய் தோன்றினார். இளமையில் சமண சமயத்தைச் சார்ந்து பின்னர் தம் தமக்கையாரின் அருள்திறத்தால் மீண்டும் சைவரானார். 81 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து இறைப்பணி புரிந்த பெருந்தகையனார் **“வாகீசர்”** என்றும், **“நாவுக்கரசர்”** என்றும் அழைப்பட்டார். தாண்டகம் என்னும் ‘பா’ வகையை கையாளுவதில் வல்லவராகையால் **“தாண்டகவேந்தர்”** என்றும் சிறப்பிக்கப்பட்டார். அவர் திருநாவுக்கரசருக்குத் தீராத சூலைநோய் இருந்தது. தம் சூலைநோயையும், மாயையும் அறுத்தெரிவதற்காகவும் ஏழுலகின் துயரையெல்லாம் போக்குவதற்காகவும் இறைவன் எதிரே சந்நிதியில் நின்று **“கூற்றாயினவாறு விலக்ககிலீர”** என்ற திருப்பதிகத்தைப் பாடினார்.

இராகம் : நவ்ரோஜ் தாளம் : ஆதி

**“கூற்றாயின வாறு விலக்ககிலீர**
**கொடுமை பல செய்ததை நானறியேன்**
**ஏற்றாய் யடிக்கே இரவும் பகலும்**
**பிறியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றார் தென் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு தொடங்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன்! அதிகைக் கெடில**
**வீரட்டான் துறை அம்மானே!”**

இவ்வாறு துவங்கும் தேவாரத் திருப்பதிகத்தை மருள்நீக்கியார் பாடி முடித்ததும் அக்கணமே அவருடைய வயிற்றிலுள்ள கொடிய சூலைநோயும் நீங்கியது. திருநாவுக்கரசர் பல சிவஸ்தலங்களுக்குச் சென்று தமிழ்ப் பாமாலைகள் பாடி, இறைவன் குடிகொண்டுள்ள ஆலயங்களில் உழவாரப் பணிகளையும் மேற்கொண்டு திருத்தொண்டு செய்து இறைவனுடன் கலந்தார்.

**8. ஸக்யம்**

பக்தியின் நிலைகளில் ஒன்று பக்தன் நேருக்குநேராக இறைவனுடன் சகஜமாக உரையாட ஆரம்பிக்கிறான். இந்நிலை ஸக்யமாகும். தேவார மூவரில் ஒருவரான சுந்தர மூர்த்தி நாயனார் இறைவனைத் தன் தோழனாகவேகொண்டு பாடியவர். சுந்தரர் 8ஆம் நூற்றாண்டில் 2ஆம் நரசிம்மன் காலத்தைச் சேர்ந்தவர். திருநாவலூரில் சைவஅந்தணர் குலத்தில் சடையனாருக்கும், இசை ஞானியாருக்கும் மகனாகப் பிறந்தார். சிவனருளால் தோன்றிய குழந்தைக்கு நம்பியாரூரர் எனப்பெயரிட்டனர். திருமுனைப்பாடி நாட்டினை ஆட்சிசெய்த நரசிங்க முனையாரையார் என்னும் மன்னர் நம்பியாரூரரைப் பெற்றோரிடம் வேண்டி பெற்ற தம் அரசிளங்குமாரனாக ஆதரித்து வளர்த்துவந்தார். அந்தனர் மரபுக்கேற்பப் பூனூல் அணிந்து மறைகள்நான்கும் கற்றறிந்தார். தமிழ் நூல்கள் வடமொழிகள் கற்றுப் புலமை செல்வராய் திகழ்ந்தார்.

இவருக்கு மணப்பருவம் வந்ததும் பெற்றோர்கள் தங்கள் மரபுக்கேற்ப புத்தூர் சடங்கவி சிவச்சார்யார் மகளை மணம்பேசி திருமண நாளும் குறித்தனர். முன்பு திருக்கயிலையில் ஆலாலசுநதரர் இருபெண்கள் மீது காதல் கொண்டதால் அவரை பூமியில் மானிடராகப் பிறக்கும்படி சிவபெருமான் கட்டளையிட்டபோது சுந்தரரைச் சமயத்தில் தடுத்தாட்கொள்வதாக வாக்களித்திருந்தார். தான் அருளிய மொழியின்படியே இறைவன் கிழவேதியன் உருவம்கொண்டு மணப்பந்தலில் வந்து சுந்தரர் தமக்கு அடிமை என்று அவரது முன்னோர் எழுதிக்கொடுத்தாக கூறினார். என்னுடைய விருப்பம் இல்லாமல் இந்த திருமணம் நடக்காது என்று கூறி அந்த ஓலையை வாங்கி கிழித்து விட்டார். இவ்வழக்கினைத் தீர்க்க அனைவரும் திருவெண்ணைய் நல்லூர் வரவேண்டும் என்றும்

மூல ஓலையைக்காட்டி வழக்குத்தொடருவேன் என்று கூறினார். அனைவரும் பின்தொடர திருவெண்ணைநல்லூர் ஆலய திருவருட்டரையில் மறைந்தார்.

மண்ணின் வாழ்க்கைத் துன்பம் சுந்தரரைத் தொடரவிடாதபடி தடுத்தாட்க் கொண்டதாகக் கூறி தம்மை வன்மை பேசியதால் "**வன்தொண்டர்**" என்னும் பெயர் பெற்றாய், ஆண்டவன் தம் அழகான கண்களால் அருளோடு நோக்கி முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந்தாய்! அதனால் என் பெயரைப் பித்தன் என்றே பாடுவாயாக! என்று அருளினார். உமையம்மையை உடம்பில் ஒரு பாதியாகக் கொண்டு தாயைவிட இனியவராக விளங்கும் சிவபெருமானைப் "**பித்தா பிறைசூடி**" என்று நம்பியாரூரர் பாட ஆரம்பித்தார்.

பண் : இந்தளம்

**"பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா**
**எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்**
**அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே."**

தொடர்ந்து பலதிகங்களைப் பாடினார். இவரது பதிகங்கள் ஏழாம் திருமுறைகளாகக் தொகுப்பட்டுள்ளது. "**தம்பிரான் தோழர்**" என்று இறைவனின் தோழனாக அழைக்கப்பட்டார்.

### 9. ஆத்ம நிவேனம்

பக்தியின் இறுதி நிலை சரணாகதி ஆகும். தன் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணிப்பது ஆத்ம நிவேதனம் ஆகும். பக்தி நிலை வெளிப்பாட்டின் கடைசி நிலை இதுவே என சகலமும் அவனே என பரப்பிரம்மத்திடம் ஐக்கியமாவது சரணாகதத்வம் ஆகும்.இனிமேல் நாம் மேலே வரவே முடியாது, என்று எல்லாமே கைவிடப்பட்ட கடைசி நிலை. இந்த நிலையில் தான் பூமிதேவி பாதாளத்தில் கிடந்தாள். காப்பதற்கு யாருமே இல்லாதநிலையில் வராகமூர்த்தியிடம் சரணடைந்தாள். அவர் அவளை அவரது கொம்பில் வைத்து உயரே தூக்கி வந்து நிலைநிறுத்தினார். அதுபோல பாகவதத்தில் திரௌபதி கௌரவர்களால் சபையில் துகிலுரிக்கப்பட்டபொழுது கண்ணனிடம் இருகரம் கூப்பி சரணடைகிறாள். கண்ணன் அவளின் மானம்காத்து இரட்சிக்கிறான். இராமாயணத்தில் இராவணன் தம்பி விபீஷணன் ஸ்ரீஇராமரிடம் சரணடைவது.

**திருச்சிந்த விருத்த பாசுரம்**

**"குலங்களாக ஈரிண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்**
**நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன்**
**புலன்கள் ஐந்தும் வென்றிலேன், பொறியிலேன் புனித நின்**
**இலங்கு பாதம் இன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே"**
**(திருமழிசை ஆழ்வார்)**

"பரிசுத்தமான எம்பெருமானே, உயர்ந்த குலங்கள் நான்கிலும் நான் பிறக்கவில்லை. நலம் எல்லாம் தருகின்ற நான்கு வேதங்களைப் படிக்கவில்லை, நாவினால் உரைக்கவும் இல்லை. தறிக்கெட்டுஓடும் எனது ஐம்புலன்களையும் அடக்கவில்லை. ஞானமில்லாத நான் உனது திருப்பாதங்களைத்தவிர வேறு பிழைக்கும் வழியும் அறியாதவனாகவே இருக்கறேன்" என்று திருமழிசை ஆழ்வார் இறைவனிடம் முறையிடுகிறார். "பகவானே உன்னைவிட்டால் வேறுயாறும் எனக்குக்கதி இல்லை" என்று மனமுருகி அவனை சிரம்தாழ்ந்து வணங்குகிறார். ஞானிகள், முனிவர்கள், ஆன்றோர்கள் யாவருமே இந்த சரணாகதித்வத்தினில்தான் வாழ்க்கை நெறிமுறைகளை வகுத்து வாழ்ந்தவர்கள். பக்தி எனும் அன்பு மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரிடத்தும் காணப்படுகிறது. இது பலவிதங்களில் வெளிப்பட்டாலும், நிறைவாகப் பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்தி முக்திநிலையினைப் பெற்று உலகம் உள்ளளவும் போற்றக்கூடியவர்களாக உயர்த்துகிறது.